**தலைப்பு 265 – மன்னார் மாவட்டச் செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2023 மே 24 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 19 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மன்னார் மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது இவ்விடயம் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(I)(ஈ) உப பிரிவின் பின்வரும் விடயங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னையை ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் மேம்படுத்தலுக்குமென செலவு செய்யப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா. 7,226,394 நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களாக காட்டப்பட்டிருக்காமையினால் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி இத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மேற்படி தவறு இடம்பெறாதிருக்க உரிய அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் சரியான பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | 2,625 சதுர அடி விஸ்தீரணமுடைய மாவட்டச் செயலக காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விலை மதிப்பீட்டு திணைக்களத்திடம் சொத்துக்களிற்கான மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்று நிதிக்கூற்றுக்களில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2.1 பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் 2019 தொடக்கம் 2021 வரையான காலப்பகுதியில் அர்ப்பணிக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா. 98,566,889 நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றிருக்காமையால் கடந்த 01 தொடக்கம் 03 வருடங்களாக கொடுப்பனவு செய்யப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பொறுப்பாக காணப்படுகின்றது. | ஒதுக்கீட்டினைப் பெற்று கையிலுள்ள பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யப்படுவதற் குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி<br>ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| **2006 ஆம் ஆண்டின் பெறுகை கைந்நூல்** | | | | | |
| (அ) | பிரிவு 4.2.1, 4.2.3 | 44,149,676 | மீளாய்வாண்டில் கட்டங்களும் கட்டிட அமைப்புக்களும் என்ற செலவின விடயத்திற்கான பெறுகைக்கால அட்டவணை மற்றும் விபரமான பெறுகைத்திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். | பெறுகைக் கைந்நூலின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | பிரிவு 5.4.8 | 2,634,846 | தூவல் நீர்ப்பாசன உபகரணங்களின் கொள்வனவுக்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்த தொகையின் 10 சதவீதமான அளவு செயற்பாட்டு பிணை முறி பெறப்பட்டிருக்க வேண்டியிருந்த போதிலும் மாவட்டச் செயலகத்தினால் கூட்டுமொத்தம் ரூபா. 1,317,423 அல்லது 5 சதவீதம் பெறப்பட்டிருந்தது. | மாவட்டச் செயலாளரின் அனுமதிக்கமைவாக 5 சதவீதம் பெறப்பட்டிருந்தது. | பெறுகைக் கைந்நூலின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**2.3 முற்பணம் வழங்கலும் தீர்ப்பனவு செய்தலும்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவி இடைநிறுத்தப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட 05 அலுவலர்களது பதவியணியினர் கடன் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 623,250 தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4 இன் பிரகாரம் அறவிடப்பட்டிருக்க ஆக்க" ர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கடன் நிலுவையினை அறவிடுவதற்கு ஆக்க" ர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 ஏதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரினைப் பெற்றுக்கொடுப்பதற்கென மணித்தியாலம் ஒன்றுக்கு 750 லீற்றர் நீரை சுத்தகரிக்கும் இயந்திரம் மற்றும் அதற்கான அறை அமைப்பதற்கு கூட்டுமொத்தம் ரூபா 3.28 மில்லியன் கொடுப்பனவு செய்து கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும் குறித்த தொகைக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு 500 லீற்றர் நீரை சுத்திகரிக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தமையால் அக்கிராம மக்கள் நாளொன்றில் தேவையான அளவு சுத்திகரிக்கப்பட்ட நீரினைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | பொருத்தமான பதில் தரப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டலின் 5.6 இன் பிரகாரம் பரிந்துரைக்கப்பட்ட குறிப்புரைகளின் பிரகாரம் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 26,348,460 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 80 பயனாளிகளின் தூவல் நீர்ப்பாசனத் திட்டத்தினை பெறுகை நடைமுறையின் போது விலைப்பட்டியல் ” ரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை, பெறுகையின் மொத்த விலை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை, அதிகாரமளிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை மற்றும் தொழிநுட்ப மதிப்பிட்டுக் குழுவின் பொழிப்பு அறிக்கையும் இன்றி கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வழங்குநர்கள் மற்றும் ஏனையோர் உரிய விலைப்பட்டியல் படிவத்தினை ” ரணப்படுத்தவில்லை. எனினும் வழங்குநர்கள் பிறிதொரு பட்டியலில் குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை நடைமுறையின் போது பெறுகை வழிகாட்டி மற்றும் கைந்நூலுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள 14 மோட்டார் சைக்கிள், 01 இரண்டு சில்லு உழவியந்திரம், 01 உழவியந்திரப் பெட்டி மற்றும் 03 ஏனைய வாகனங்கள் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ கடந்த 05 ஆண்டுகளாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் பதிவுப்புத்தகம் கிடைக்கத்தக்கதாக இல்லாதமையால் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரிடம் மேலதிக ஆலோசனை பெறப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படுதல் வேண்டும். |

### 3.4 முகாமைத்துவப் பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிலிருந்து மாவட்ட செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்டுவரும் தொழில்நுட்ப ” ங்கா, வாகன தரிப்பிடம் மற்றும் ஒன்றுகூடல் மண்டபம் என்பவற்றின் நிர்மாணத்திற்காக நாளதுவரை கூட்டுமொத்தம் ரூபா 72,565,061 செலுத்தப்பட்டிருந்த போதிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்திற்கமைவாக அனுமதி பெறப்பட்டிருக்கவோ கட்டிட வடிவமைப்பு தயாரிக்கப்பட்டிருக்கவோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் தவிர்க்கப்படும். | நிர்மாண வேலைகள் தொடர்பாக மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்படுவதுடன் உரிய அனுமதிகளும் பெறப்பட்டிருக்க ஆக்க” ர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி 667 ஆக காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப மட்டங்களில் 172 ஆளணியினர் நிரப்பப்பட்டிருக்காது வெற்றிடங்களாக விடப்பட்டிருந்தன. இதனால் மாவட்டச் செயலகத்தால் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்குவதற்கான செயலாற்றுகைக் குறிகாட்டிகளான வியாபாரப் பதிவுச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் காணி அனுமதிப்பத்திரம் வழங்குதல் ஆகிய செயற்பாடுகள் நலிவடைந்திருந்தன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | தேவையின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |